# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • மார்ச் 18, 2019 Weekly E-paper • March 18, 2019




## பொள்ளாச்சி...

-பொள்ளாச்சி மா. உமாபதி

BSNL Connecting India

## கனவு நனவானது!

-மா.உதயகுமார்

## பெரியாருக்கு அவமானம்?

தலையங்கம்



# மக்களைத் தவிக்க விட்டவர்கள் மக்கள் காவலர்களா?

-சுப.வீரபாண்டியன்

கருஞ்சட்டைத் தமிழர்
ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● மார்ச் 18, 2019
Weekly E-paper ● March 18, 2019

# மக்களைத் தவிக்க விட்டவர்கள் மக்கள் காவலர்களா?

● சுப. வீரபாண்டியன்



சென்ற தேர்தலில் தங்களை "வளர்ச்சியின் வழிகாட்டிகள்" என்று சொல்லிக் கொண்டவர்கள், இந்தத் தேர்தலில், தங்களுக்குத் தாங்களே "மக்களின் காவலர்கள்" (Chowkidar) என்று பட்டம் சூட்டிக் கொண்டுள்ளனர்.

எனினும் ஒரு வேறுபாடு உள்ளது. சென்ற தேர்தலில் ஏமாந்த மக்கள் இந்தத் தேர்தலில் ஏமாறப் போவதில்லை!

யார் மக்களின் காவலர்கள்? ஒவ்வொருவரின் வங்கிக் கணக்கிலும் 15 லட்சம் ரூபாய் பணம் போடுவோம் என்று சொல்லிவிட்டு, வங்கியிலிருந்த தம் பணத்தைக் கூட எடுக்க முடியாமல், மக்களைத் திண்டாடித் தெருவில் நிற்க வைத்த இவர்களா?

வளர்ச்சி வளர்ச்சி என்று சொல்லி வாக்குகளைப் பெற்றுக்கொண்டு, 340 ரூபாய் விலைக்குக் கிடைத்த எரிவாயுவை இன்று 900 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்து கொண்டுள்ளனரே, இவர்களா?

ஜிஎஸ்டி வரி என்ற பெயரில், மக்களின் பணத்தைப் பலவகைகளிலும் பிடுங்கிக் கொண்டுள்ளனரே, இவர்களா? ஆண்டுக்கு இரண்டு கோடிப் பேருக்கு வேலை தருவதாகச் சொல்லிவிட்டு, இன்று வேலையில்லாத் திண்டாட்டம் பெருக வழி வகுத்துள்ளார்களே, இவர்களா?

ரபேல் ஊழல் ஒரு பக்கமிருக்க, ஊழலே உருவமாய்க் கொண்டிருக்கும் எடப்பாடி கட்சியுடன் கூட்டணி வைத்திருக்கும் இவர்களா?

மக்கள் காவலர்கள் இல்லை, மக்களால் அரசியல் தளத்திலிருந்து விரட்டியடிக்கப்படப் போகின்றவர்களே இவர்கள் என்பதை, மே 23 ஆம் நாள் இந்திய மக்கள் உரத்துச் சொல்வார்கள்! ●

ஏப்ரல் 18

வாக்களிப்பீர் உதயசூரியனுக்கு!


# பொள்ளாச்சி

## அரசும், காவல்துறையும் என்ன செய்கிறது?

● பொள்ளாச்சி மா. உமாபதி

பொள்ளாச்சி பகுதியில் உள்ள இளம் பெண்கள் ஒருசில வசதிபடைத்த இளைஞர்களால் ஏமாற்றப்பட்டு சீரழிக்கப்பட்டுள்ளனர் . அவற்றை வீடியோ படமெடுத்துவைத்து தொடர்ந்து மிரட்டப்பட்டு பணமும் பறித்து வந்துள்ளனர். இதைஅந்த இளைஞர்கள் தனியாக, தானாக செய்த குற்றங்கள் என்று கடந்துபோய்விட முடியாது.





தொடக்கத்தில் காசுபணம், வசதி வாய்ப்பு, இளமை திமிர் கொண்ட இளைஞர்கள் ஓரிரு பெண்களிடம் சில்மிஷம் செய்துள்ளனர். அப்போதே ஈவ் டீசிங் வழக்கில் அவர்கள் சிக்கும்போது அவர்களைக்காப்பாற்ற வந்தவன்தான் பார் நாகராஜ் என்னும் கொடியவன். அவனுக்குக் காவல்நிலையத்தில் பெரும்செல்வாக்கு.. காரணம் அவன்நடத்தும் பார் மூலம் காவல் துறைக்கு அவன் செலுத்தும் பெரும் தொகை.. அவனுக்குப் பின்னணியில் இருப்பவர் பொள்ளாச்சி நகரஆளுங்கட்சியின் உயர்ந்த மனிதர்..



இப்போது அவர்களுக்கு வேடிக்கைக்கு வேடிக்கை, கேளிக்கைக்கு கேளிக்கை, விருந்துக்கு விருந்து, சுகத்துக்கு சுகம், பணத்துக்கு பணம். எல்லாவற்றிற்கும் மேலாக அரசியல் பின்னணியும் பாதுகாப்பும் அவர்களைப் பேயாட்டம் போட வைத்துள்ளது. பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்கிறபடி மான அவமானங்களுக்கு அஞ்சிப் பலரும் ஒதுங்கி இருக்க ஒரு பெண்ணின் தமையன் காவல்துறையில் புகார் கொடுத்ததன் மூலம் பிரச்னை வெளியே தெரியத்தொடங்கியது.திமுக, கம்யூனிஸ்ட், பெண்கள் இயக்கங்கள் பிரச்சனைக்காக போராடத்தொடங்கியதுடன், திமுக தலைவர் தளபதி முக ஸ்டாலினின் அறிக்கைக்குப் பிறகு பிரச்சனை விசுவரூபம் எடுக்கிறது. அத்துடன் நாளுமன்ற உறுப்பினர் கனிமொழி அவர்கள் நேரடியாகப் பொள்ளாச்சி வந்து ஆர்ப்பாட்டம் செய்தது பிரச்சனையைக் கொழுந்து விட்டு எரியச் செய்தது இப்பிரச்சனையை மக்கள் மன்றத்துக்கு கொண்டு வந்ததில் "நக்கீரனின்" பங்கு மகத்தானது.

அதுவரை, மாவட்டக் காவல்துறை அதிகாரி, "இதில் ஆளும்கட்சி பிரமுகர்களுக்குத் தொடர்பு இல்லை " என்று எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்று கூறி வந்தார். ஆனால் அதன் பின் தான் ஆளும்கட்சி பிரமுகர் பார் நாகராஜன் கட்சியை விட்டு நீக்கப்படும் நிலை வந்தது. இப்போதும் பார் நாகராஜன் மீது பாலியல் வழக்கு எதுவும் பதியவில்லை. மாறாக அடிதடி வழக்குதான் பதிவாகி உள்ளது. கொடியவன் நாகராஜன் செயலைக் கண்டு கொதித்தெழுந்த மக்கள் அந்த பாரை அடித்து நொறுக்கினர். இதன் பின் பாரை அடித்த பொதுமக்கள் மீதுதான் வழக்குகள் பதிவாகி உள்ளன. இப்போது, பார் நாகராஜனுக்குப் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.. இதில் வழக்கில் சிக்கவிருந்த தன் சாதி நகரப் பெரும்புள்ளியைக் காப்பாற்றியதுடன் தனது உட்கட்சி அரசியல் எதிரியை பழிவாங்கியுள்ளார் மாவட்டப் பெரும்புள்ளி.

இதில் சந்தேகம் எல்லாம், காவல் துறைமீதுதான். காவல்துறையின் அனுமதியோடும், ஆசீர்வாதத்தோடும்தான் இக்கொடுங்குற்றங்கள் நடந்து வந்துள்ளன.இதில் பாதிக்கப்பட்ட ஐந்து, ஆறு இளம் பெண்கள் தற்கொலை செய்துகொண்ட போதும் அவற்றை மூடி மறைக்கத் துணை போனது காவல்துறை. அப்பாவிப்பெண்களை வலையில் சிக்க வைத்து , மிரட்டி அவர்களைத் தங்கள் மனம்போல் பயன்படுத்திய கொடியவர்களைப் பற்றி நன்கு தெரிந்திருந்தும் காவல்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை , என்பது மட்டுமல்ல, அதில் ஆளுங்கட்சிக்குத் தொடர்பில்லை என்று நற்சாட்சி பாத்திரம் வேறு கொடுக்கிறது.

தங்கள் கும்பலில் 20பேர் இருப்பதாக குற்றவாளியே வாக்கு மூலம் கொடுத்துள்ளான். எனினும் நான்கு பேரை மட்டும் கைது செய்துள்ளனர். இந்த நாசகாரக் கும்பல் நூறுக்கும் அதிகமான பெண்களைச் சீரழித்தனர் என்றால், வேறு ஒரு சிவில் என்ஜினீயர் சபரிராஜன் என்பவன் தனியாக அறுபது பெண்களைச் சீரழித்து உள்ளான். பொள்ளாச்சிப் பகுதியில் காவல்துறை என்ற ஒன்று இருந்ததா அல்லது அது அயோக்கியர்களின் ஏவல் துறையாக பணியாற்றுகிறதா? சென்னையைச் சேர்ந்த பெண் டாக்டர் ஒருவரை மிரட்டி ஒன்னரைக்கோடி ரூபாய் பறித்துள்ளனர். மானஅவமானத்துக்கு அஞ்சி அந்த டாக்டர் எழுத்துமூலமாக புகார் கொடுக்காமல் வாய்மொழிப் புகார் கொடுத்ததால், காவல்துறை அதனைப் பயன்படுத்தி அந்தப் பணத்தை பறித்து தாங்கள் வைத்து கொண்டனர், என்றால் இவர்களுக்கும் அந்த கொடியவர்களுக்கும் என்ன வேறுபாடு இருக்க முடியும். அந்த வழக்கில் தப்பித்த பின்னர் தான் அந்தக் காமக்கொடூரன்களின் ஆட்டம் அதிகமாகி உள்ளது.

இப்படிப்பட்ட காவல்துறை அதிகாரிகள் இருக்கும்வரை ஒருநாளும் குற்றங்கள் குறையாது.முதலில் சீரமைக்கப்படவேண்டியது காவல்துறைதான். இந்த காமக்கொடூரன்களை கண்டும் காணாமல் விட்டிருக்கும் ஆளும்கட்சித் தலைமையை என்ன சொல்வது. எங்கோ ஒரு பார் நாகராஜனைக் கட்சியை விட்டு நீக்கினால் போதுமா? அவனைப் பயன்படுத்தி பல உயர்ந்த மனிதர்கள் தங்களுக்கு மேல் உள்ள பல மேல்மட்டத்தலைகளுக்கு "சப்ளை அண்ட் சர்விஸ்" செய்து உள்ளனரே! அவர்களைத் தண்டிப்பது எப்படி.? வருகிறது தேர்தல் –. உடனடியாக அவர்களை முற்றிலும் புறக்கணிப்பதன் மூலம் ஜனநாயக ரீதியாக முதல் கட்டத் தண்டனைகளைத் தருவோம். அடுத்து ஆட்சி மாற்றத்தின் பின் முழுமையான சட்டரீதியான தண்டனைகளைத் தருவோம்.

இது எங்கே போய் நிற்கும் என்றால், இரண்டு மாணவிகள் தங்கள் பாதுகாப்புக்குக் கைத்துப்பாக்கி வைத்துக் கொள்ள அனுமதி வேண்டி விண்ணப்பித்துள்ளனர். மக்களைப் பாதுகாக்க வேண்டிய காவல்துறையும் அரசும் குற்றவாளிகளைப் பாதுகாத்து வருவதால் ஏற்பட்ட அவநம்பிக்கையின் வெளிப்பாடு. காவல்துறையை நம்பாமல் கைத்துப்பாக்கியை நம்பத் தலைப்பட்டுள்ளது நல்லதல்ல.

உண்மையாய், உயிராய் காதலித்து மணவாழ்க்கை மேற்கொண்ட, சோமனூர் சிற்றரசு–சுகன்யா இணையர், தருமபுரி திவ்யா–இளவரசன் இணையர் , உடுமலை கௌசல்யா–சங்கர் இணையர் போன்றோரை கொன்றுகுவித்து இரத்தத்தாகம் அடங்காமல் திரியும் சாதி வெறியர்களும்,பசுவுக்காக பரிந்து வந்து பாமரர்களை கொலை செய்யும் மதவாதப் பேர்வழிகளும் இந்த தங்கள் பெண்களின் நிலைகண்டு பொங்கி எழாமல் தூங்கி வழிகின்றனர். பெண்களை விடவும் அவர்களுக்கு தங்கள் சாதியும், மதமும் , அரசியலும்தான் பெரிதாக இருக்கிறது. நமக்கோ மனித மாண்புகள் உயர்வானவை. மனிதநேயம் உன்னதமானது. ●

வாக்களிப்பீர் உதயசூரியனுக்கு!

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
தமிழ்மறவன்
உதயகுமார்
வெற்றிச்செல்வன்

வெளியிடுபவர்
கோ.தினகரன்

இணையதளம்
www.keetru.com
www.peravai.com
www.peravainoolagam.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-4204 7162

## திருவண்ணாமலை



திருவண்ணாமலை மாவட்டத்தில், திராவிட இயக்கத் தமிழர் இயக்கப் பேரவையின் மாவட்டக் கூட்டம் 17.3.2019 அன்று நடைபெற்றது. மாநில அமைப்புச் செயலாளர் தோழர் பா.புலேந்திரன் தலைமையில், நடைபெற்ற இக்கூட்டத்தில் தலைமை நிலையச் செயலாளர் தோழர் எட்வின், மாவட்ட அமைப்பாளர் தோழர் சி. பன்னீர் செல்வம், நகரத் தலைவர் தோழர் வி.ரவி, நகரத் துணைத்தலைவர் தோழர் பொன்.சேட்டு, நகரச் செயளாலர் தோழர் புகழேந்தி, நகரப் பொருளாளர் தோழர் துரை, நகர துணைச் செயளாலர் தோழர் சண்.கதிரவன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

## திண்டுக்கல்



திண்டுக்கல் மாவட்ட திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாக 16.3.2019 அன்று தெருமுனைப் பிரச்சாரம் நடைபெற்றது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் மத்திய பாரதிய ஜனதா கட்சியின் மக்கள் விரோதப் போக்கையும், தமிழக அ.இ.அ.தி.மு.க-வின் மக்கள் விரோத ஆட்சியையும் கண்டித்து, வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்கு ஆதரவு திரட்டிய இந்த தெருமுனைப் பிரச்சாரக் கூட்டத்தில் தோழர் வேடசந்தூர் ரவி பேசுகிறார்.

## மஸ்கட்



திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயளாலர் தோழர் சுப. வீரபாண்டியன் 14.3.2019 அன்று மஸ்கட் விமான நிலையம் அடைந்த போது, அவரை வரவேற்ற மஸ்கட் தோழர்கள்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## பெரியாருக்கு அவமானம்?

திருச்சி புத்தூரில் தந்தை பெரியாரும், அன்னை மணியம்மையாரும், அந்தப் பகுதி மக்களுக்குக் கல்வி வாய்ப்புகளைத் தருவதற்காக உருவாக்கப்பட்டது பெரியார் கல்வி நிலையம்.

இத்தகைய சீர்மிகு கல்வி நிறுவனமான பெரியார் கல்வி வளாகத்தின் சுற்றுச் சுவர் தமிழக அரசின் நெடுஞ்சாலைத் துறையினரால் இடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

இதற்காக அதிகாரிகள் கொடுத்துள்ள கடிதம் முறையற்றது.

தமிழகம் பெரியாரின் மண். தமிழகத்தில் பாஜக கால் ஊன்ற முடியாத நிலையில் எப்படியேனும், பெரியாருக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும்.

பாஜக, எச்.ராஜாவின் நாவடக்கமற்ற பேச்சுகள் மூலம் தந்தை பெரியாருக்கு எதிரான நச்சு விதைகளை விதைக்க முயன்றும் முடியவில்லை.

பெரியார் சிலையை உடைக்க வேண்டும் என்று பேசிக், கலவரத்தை உண்டு பண்ண முயன்றதும் உண்டு.

பாஜகவுக்கு எதிர்கொள்கை உடையவர் தந்தை பெரியார்.

ஆனால் அண்ணாவின் பெயரால் கட்சியை வைத்துக் கொண்டிருக்கும் இ.பி.எஸ் மற்றும் ஓ.பி.எஸ்க்கு தெரியாதா- அண்ணா உருவான இடமே தந்தை பெரியார் என்று.

இடிக்கப்பட்ட கல்வி வளாகச் சுவரை அரசே கட்டிக் கொடுக்க வேண்டும்.

இப்படிப்பட்ட நிலையில், இப்பொழுது பெரியாரால் நிறுவப்பட்ட, மக்களுக்குப் பயன் தரும் கல்வி நிறுவன சுற்றுச்சுவரை, பாஜக வின் எடுபிடி அதிமுக அரசை கொண்டு இடிக்கச்செய்தது கண்டிக்கத்தக்கது.

ஜல்லிக்கட்டை பாதுகாத்தால்
சமூக விரோதிகள்!
நீட் தேர்வை எதிர்த்தால்
தேச விரோதிகள்!
மீத்தேன், ஹைட்ரோ கார்பன்,
ஸ்டெர்லைட் ஆலையை எதிர்த்தால்
நக்ஸல்வாதிகள்!
வாக்களியுங்கள்
உதயசூரியனுக்கு!

# ஒரு கனவு நனவானது!

மா.உதயகுமார்

TRAI (Telephone Regulatory Authority of India) அளித்திருக்கும் புள்ளி விவரத்தின் படி தற்போது இந்தியாவில் 117 கோடி அலைப்பேசி சந்தாதாரர்கள் இருக்கிறார்கள். இந்திய அரசின் தொலைத்தொடர்பு நிறுவனமான BSNL, அதனுடைய 1.76 இலட்சம் ஊழியர்களுக்கு பிப்ரவரி மாத ஊதியத்தை வழங்காமல், அது நாடு முழுதும் பேசப்பட்டு, தற்போது எப்படியோ சமாளித்து ஊதியம் வழங்கப்பட்டிருக்கிறது.

கடந்த 5 ஆண்டுகளில் எப்போதும் இல்லாத அளவிற்கு அடுக்கடுக்காகச் சரிந்தன பொதுத்துறை நிறுவனங்கள். அதில் BSNL தற்போது பேசு பொருள் ஆகியிருக்கிறது.

நவம்பர் 2018 இல் BSNL தொழிற்சங்கங்கள் பல குற்றச்சாற்றுகளை முன்வைத்தன. ஆட்சியாளர்கள் செய்த குற்றங்கள் அரையும்குறையுமாக வெளிவந்தன. ரிலையன்ஸ் (JIO) நிறுவனத்திற்குத் தனிச்சலுகைகள் வழங்கப்படுகிறதென்றும், ரிலையன்ஸ் நிறுவனத்திற்குப் போட்டியாக வந்துவிடக் கூடாது என்பதற்காக 4G ஸ்பெக்ட்ரம் BSNL நிறுவனத்திற்குக் கொடுக்கப்படவில்லையென்றும் அந்த தொழிற்சங்கங்கள் குற்றம் சாட்டின. “ரிலையன்ஸ் (JIO) நிறுவனத்தின் திட்டம் சந்தையில் இருக்கும் போட்டியாளர்களைத் துடைத்து எறிவதே. அந்தப் போட்டியாளர்களில் BSNL லும் அடங்கியிருக்கிறது என்றும் அந்தத் தொழிற்சங்கங்கள் அறிவித்ததோடு அதனால் தங்களுடைய வேலைகளும் ஆபத்தில் இருக்கின்றன என்கிற அபாயத்தையும் வெளிப்படுத்தினர்.

பிரதமர் அலுவலகம் (PMO), தொலைத்தொடர்புத் துறை (Department of Telecommunications), TRAI, நீதிமன்றங்கள் என நான்கு சுவர்களுக்குள் நடந்த நாடகங்களைப் பார்த்தால் BSNL தொழிற்சங்கங்கள் சொன்னது பத்தில் ஒன்றே என்பது விளங்குகிறது.

மேலோட்டமாகப் பார்த்தால் நாட்டின் தொலைத்தொடர்புக் கொள்கை முடிவுகளை எடுத்தது தொலைத்தொடர்புத் துறையா ரிலையன்ஸ் நிறுவனமா என்கிற சந்தேகம் எழுகிறது. சற்று கவனித்துப் பார்த்தால் ரிலையன்ஸ் நிறுவன வளர்ச்சிக்காகப் பிரதமர் அலுவலகம் தொலைத்தொடர்புத் துறையை தொடர்பு கொண்டு எடுக்கப்பட்ட கொள்கை முடிவுகள் என்பது தெளிவாகிறது.

ரிலையன்ஸ் நிறுவனத்தில் இருப்பவர்களின் உறவினர்கள் பிரதமர் அலுவலகத்தில் இருக்கிறார்கள். பிரதமர் அலுவலகத்தில் இருப்பவர்களின் உறவினர்கள் நடத்தும் நிறுவனங்களுக்கு ரிலையன்ஸின் உறவு நிறுவனங்கள் கடன் வழங்குகின்றன. உறவினர்கள் ஒருவருக்கொருவர் கொடுக்கல் வாங்கல் செய்து கொள்வது இயல்பு தானே. இப்படிப்பட்ட பாசப் பிணைப்பு கொண்டது தான் ரிலையன்ஸ் நிறுவனமும் பிரதமர் அலுவலகமும்.

நமக்குத் தெரிந்த ஊழல் எல்லாம் ஒரு அரசு அதிகாரியோ அமைச்சரோ ஒருவரிடம் பணமோ அன்பளிப்போ பெற்றுக்கொண்டு அதிகாரத்தை அவர்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துவது. ஆனால் மோடியோ அதிகாரத்தையே அம்பானியிடம் கொடுத்திருக்கிறார். எதற்காக ஒவ்வொன்றிற்காக அம்பானி அலைய வேண்டும். அவரிடம் அதிகாரத்தைக் கொடுத்துவிடுங்கள் அவருக்கு எப்போதெல்லாம் என்ன தேவைப்படுகிறதோ அப்போதெல்லாம் அவரே தேவைப்படுகிற கொள்கை முடிவுகளை எடுத்துக் கொள்வார். அவ்வளவுதான். அதிகமாக ஒன்றும் அவர் ஆசைப்பட மாட்டார். அவருக்கு எந்தப் பேராசையும் கிடையாது. Jio நிறுவனம் சேவை மனப்பான்மையுடன் தொடங்கப்பட்டது. டிஜிட்டல் இந்தியா என்னும் கனவு நனவாக வேண்டுமல்லவா? அந்தச் சேவையை இந்தியாவிற்குச் செய்ய அம்பானியைவிட்டால் வேறு யார் இருக்கிறார்கள்? நாட்டிற்கு செய்த சேவையால், Jio என்றொரு தொலைத் தொடர்பு நிறுவனத்தைத் தொடங்க வேண்டும் என்கிற யோசனையைக் கொடுத்த அவருடைய மகள் இஷாவின் திருமணத்தைக் கூட எளிமையாக 700 கோடி செலவில் தான் அம்பானியால் நடத்த முடிந்தது.

இந்த மாபெரும் பணியில் என்ன பெரிய இழப்பு நேர்ந்து விட்டது. சில இலட்சம் கோடிகள் அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கலாம், சில இலட்சம் கோடிகள் கடன் சுமை ஏற்பட்டிருக்கலாம். BSNL என்னும் நிறுவனம் ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்க முடியாமல் தடுமாறலாம். CAG இழப்புகளைக் கணக்கெடுக்கமாட்டார். அப்படியே எடுத்தாலும் நாட்டிற்காக ரிலையன்ஸ் நிறுவனம் வருவாய் இழப்பைச் சந்தித்திருக்கிறது என்று உண்மையைப் போட்டு உடைத்துவிடுவார். CAGக்கு உண்மையைத் தவிர் வேறொன்றும் தெரியாது.

Jio சந்தைக்கு வருவதற்கு முன் 9 தொலைத்தொடர்பு நிறுவனங்கள் இருந்தன. இப்போது Jioவைத் தவிர இன்னும் 2 நிறுவனங்கள் இருக்கின்றன. இந்தியாவிற்குச் சேவை செய்யும் முழுத்தகுதியும் அம்பானியின் Jio நிறுவனத்திற்கே உண்டு. ஆகையால் இப்போது இருக்கும் இரண்டு நிறுவனங்களும் ஒழிந்து இப்போதைக்கு தொலைத்தொடர்புத் துறையில் One India One Jio என்பதும், சில நாட்களில் எல்லாத் துறைகளையும் சேர்த்து One India One Reliance என்பதும் ஒரு ஏழையின் கனவு. ஓரளவுக்கு அந்தக் கனவு நனவாகிவிட்டது. ரிலையன்ஸின் கனவு முழுமையாக நனவாக சங் பரிவாரின் ஒரே தேசம் என்னும் கனவு நனவாக வேண்டும். சங் பரிவாரின் கனவு நனவாக ரிலையன்ஸ் பாடுபடும், ரிலையன்ஸின் கனவு நனவாக் சங் பரிவார் பாடுபடும். ●

கருஞ்சட்டைப் பதிப்பகம்

இணையத்தள விற்பனை (online sales)

கருஞ்சட்டைப் பதிப்பக வெளியீடுகளும், தோழர் சுபவீ, பேராசிரியர் அருணன் ஆகியோர் எழுதியுள்ள பிற நூல்களும் இப்போது இணையத்தள விற்பனையில் உள்ளன. இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்தும் நூல்களை இணைய வழியில் அனைவரும் பெற்றுக்கொள்ளலாம். வங்கி அட்டைகள் மூலமோ, அல்லது வீட்டிற்குப் புத்தகம் வரும்போது பணம் செலுத்தியோ நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இணையத்தள முகவரி : karunchattaibooks.com

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.